## ஸ்ரீவசநபூஷணம்

## மூன்றாம் ப்ரகரணம்

244. மங்களாஶாஸநம் விருத்தம் அன்றோ என்னில்; ஜ்ஞாந தசையில் ரக்ஷ்ய ரக்ஷக பாவம் தன் கப்பிலே கிடக்கும்; ப்ரேம தசையில் தட்டு மாறிக் கிடக்கும்.
245. அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் கடகாகக் கொண்டு தன்னை நோக்கும்; ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்தால் தன்னை கடகாகக் கொண்டு அவனை நோக்கும்.
246. இவ்வர்த்தம் சக்ரவர்த்தி ஸ்ரீஜநகராஜன் திருமகள் விஶ்வாமித்ரன் ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகள் திருவடி மஹாராஜர் ஸ்ரீநந்தகோபர் ஸ்ரீவிதுரர் பிள்ளை உறங்காவில்லி தாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம்.
247. இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிஸங்கை பண்ண இருவரையும் அதிஸங்கை பண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே.
248. ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்றிது.
249. இவர்கள் நம்முடைய கோடியிலே என்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை.
250. ஆழ்வார்கள் எல்லாரையும் போல் அல்லர் பெரியாழ்வார்.
251. அவர்களுக்கு இது காதாசித்கம்; இவர்க்கு இது நித்யம்.
252. அவர்களுடைய ஆழங்கால் தானே இவர்க்கு மேடாய் இருக்கும்.
253. அவர்களுக்கு உபய ஶேஷத்வத்தையும் அழித்து ஸ்வரூபத்தைக் குமிழ்நீர் உண்ணப் பண்ணுமது, இவர்க்கு உபய வ்ருத்திக்கும் ஹேதுவாய் ஸ்வரூபத்தைக் கரையேற்றும்.
254. பய நிவர்த்தகங்களுக்கு பயப்படுவது ப்ரதிகூலரையும் அநுகூலராக்கிக் கொள்ளுவது, அதீத காலங்களில் லபதாநங்களுக்கு உத்தர காலத்திலே வயிறெரிவது ப்ராப்தி பலமும் இதுவே என்பது அநிமிஷரைப் பார்த்து 'உறகல் உறகல்' என்பதாய்க் கொண்டு இது தானே யாத்ரையாய் நடக்கும்.
255. அல்லாதவர்களைப் போலே கேட்கிறவர்களுடையவும் சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கை அன்றிக்கே 'ஆளுமாளார்' என்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காக ஆயிற்று பாஷ்யகாரரும் இவரும் உபதேசிப்பது.
256. அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்திகள் தர்ஶந அநுபவ கைங்கர்யங்களாலே; இவர்க்கு மங்களாஶாஸநத்தாலே.
257. உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊண் உறக்கமும் இன்றிக்கே இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாக வேணும்.
258. ஆகையாலே மங்களாஶாஸநம் ஸ்வரூப அநுகுணம்.
259. அநுகூலர் ஆகிறார் ஜ்ஞான பக்தி வைராக்யங்கள் இட்டுமாறினாப் போலே, வடிவிலே தொடை கொள்ளலாம்படி இருக்கும் பரமார்த்தர்.
260. ஒரு செய் நிரம்ப நீர் நின்றால் அசல்செய் பொசிந்து காட்டுமா போலே இவை இல்லாதவர்க்கும் இவர்களோட்டை ஸம்பந்தத்தாலே உறாவுதல் தீரக் கடவதாய் இருக்கும்.
261. ஆறுநீர் வர அணித்தானால் அதுக்கீடான அடையாளங்கள் உண்டாமா போலே ப்ராப்தி அணித்தானவாறே இந்த ஸ்வபாவ விஶேஷங்கள் தன்னடையே விளையக் கடவதாய் இருக்கும்.
262. இவற்றைக் கொண்டு சரம ஶரீரம் என்று தனக்குத் தானே அறுதி இடலாய் இருக்கும்.
263. ப்ரதிகூலர் ஆகிறார் தேஹாத்மாபிமாநிகளும் ஸ்வதந்த்ரரும் அந்யஶேஷ பூதரும் உபாயாந்தர நிஷ்டரும் ஸ்வப்ரயோஜநபரரும்.
264. இவர்களுக்கு உத்தேஶ்யரும் உபாய உபேயங்களும் பேதித்திருக்கும்.

265. தேஹாத்மாபிமாநிகளுக்கு உத்தேஶ்யர் தேஹ வர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயம் அர்த்தம், உபேயம் ஐஹிக போகம்; ஸ்வதந்த்ரர்க்கு உத்தேஶ்யர் ஸ்வர்க்காதி போகப்ரதர், உபாயம் கர்மாநுஷ்டாநம், உபேயம் ஸ்வர்க்காதி போகம்; அந்யஶேஷ பூதர்க்கு உத்தேஶ்யர் ப்ரஹ்ம ருத்ராதிகள், உபாயம் தத்ஸமாஶ்ரயணம், உபேயம் தத்ஸாயுஜ்யம்; உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேஶ்யன் தேவதா அந்தர்யாமியான ஸர்வேஶ்வரன், உபாயம் கர்ம ஜ்ஞாந பக்திகள், உபேயம் பகவதநுபவம்; ஸ்வப்ரயோஜநபரர்க்கு உத்தேஶ்யன் 'நெஞ்சினால் நினைப்பானெவன்' என்கிறவன், உபாயம் ஸ்வகீய ஸ்வீகாரம், உபேயம் ஸ்வார்த்த கைங்கர்யம்.
266. முதல் சொன்ன மூவரும் நிக்ரஹத்துக்கு இலக்கு, மற்றை இருவரும் அநுக்ரஹத்துக்கு இலக்கு.
267. மூவருடையவும் கர்மம் அநுபவ விநாஶ்யம், நாலாம் அதிகாரிக்கு ப்ராயச்சித்த விநாஶ்யம், அஞ்சாம் அதிகாரிக்கு புருஷகார விநாஶ்யம்.
268. உபாயம் ஸ்வீகார காலத்தில் புருஷ ஸாபேக்ஷமுமாய் புருஷகார ஸாபேக்ஷமுமாய் இருக்கும்; கார்ய காலத்தில் உபய நிரபேக்ஷமாய் இருக்கும்.
269. ஸ்வப்ரயோஜநபரர் எல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ என்னில்.
270. இங்கு ஸ்வப்ரயோஜநம் என்கிறது ஆஶ்ரய தோஷ ஜந்யமானத்தை.
271. ஆகையாலே தோஷம் இல்லை.
272. விஷய தோஷத்தால் வருமவை எல்லாம் துஸ்த்யாஜமாயிறே இருப்பது.
273. 'ஊமையரோடு செவிடர் வார்த்தை' 'கதமந்ய திச்சதி'.
274. இப்படி இவை இத்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும்; வக்தவ்யம் ஆசார்ய வைபவமும் ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குரு பரம்பரையும் த்வயமும்; பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டானமும், பரித்யாஜ்யம் அவைஷ்ணவ ஸஹவாஸமும் அபிமாநமும்; கர்த்தவ்யம் ஆசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்.
275. கீழ்ச் சொன்ன பகவத் கைங்கர்யம் அறிவது ஶாஸ்த்ர முகத்தாலே; ஆசார்ய கைங்கர்யம் அறிவது ஶாஸ்த்ர முகத்தாலும் ஆசார்ய வசநத்தாலும்.
276. கைங்கர்யம் தான் இரண்டு.
277. அதாவது இஷ்டம் செய்கையும் அநிஷ்டம் தவிருகையும்.
278. இஷ்ட அநிஷ்டங்கள் வர்ணாஶ்ரமங்களையும் ஆத்ம ஸ்வரூபத்தையும் அவலம்பித்து இருக்கும்.
279. புண்யத்துக்கு அஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே.
280. இவன் புண்யத்தைப் பாபம் என்று இருக்கும்; அவன் பாபத்தைப் புண்யம் என்று இருக்கும்; அவனுக்கு அது கிடையாது; இவன் அது செய்யான்.
281. கைங்கர்யம் தான் பக்தி மூலம் அல்லாத போது பீதி மூலமாய் வர வேணும்.
282. அதுவும் அல்லாத போது அதிகாரத்திலும் உபாய உபேயங்களிலும் அந்வயம் இன்றிக்கே ஒழியும்.
283. கைங்கர்யம் தன்னை பல ஸாதநம் ஆக்காதே பலம் ஆக்க வேணும்.
284. அதாவது - தான் கையேலாதே அவனைக் கையேற்கப் பண்ணுகை.
285. கொடுத்துக் கொள்ளாதே கொண்டத்துக்குக் கைக்கூலி கொடுக்க வேணும்.
286. ஸ்ரீவிதுரரையும், ஸ்ரீமாலாகாரரையும் கூனியையும் போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது.
287. மடி தடவாத சோறும் சுரு நாறாத பூவும் சுண்ணாம்பு படாத சாந்துமிறே இவர்கள் கொடுத்தது.
288. கைங்கர்ய தசை போலே முன்புள்ள தசைகளிலும் ஸ்வரூபத்தை உஜ்ஜ்வலம் ஆக்க வேணும்.
289. முன்பே நாலு தசை உண்டு.
290. அதாவது ஜ்ஞாந தசையும் வரண தசையும் ப்ராப்தி தசையும் ப்ராப்ய அநுபவ தசையும்.

291. ஜ்ஞாந தசையில் அஜ்ஞாநத்தை முன்னிடும்; வரண தசையில் அபூர்த்தியை முன்னிடும்; ப்ராப்தி தசையில் ஆர்த்தியை முன்னிடும்; ப்ராப்ய அநுபவ தசையில் அபிநிவேஶத்தை முன்னிடும்.
292. அஜ்ஞாநம் போவது ஆசார்ய ஜ்ஞாநத்தாலே; அபூர்த்தி போவது ஈஶ்வர பூர்த்தியாலே; ஆர்த்தி போவது அருளாலே; அபிநிவேஶம் போவது அநுபவத்தாலே.
293. அஜ்ஞாநத்துக்கு அடி அபராதம்; அபூர்த்திக்கு அடி ஜ்ஞாந பூர்த்தி; ஆர்த்திக்கு அடி அலாபம்; அபிநிவேஶத்துக்கு அடி அழகு.
294. ஆர்த்தியும் அபிநிவேஶமும் இருக்கும்படி அர்ச்சிராதிகதியிலே சொன்னோம்.
295. இவன்தனக்கு நாலு தசை போலே நாலு குணம் உண்டு.
296. அதாவது, ஜ்ஞாநமும் அஜ்ஞாநமும் ஶக்தியும் அஶக்தியும்.
297. இது தான் அவனுக்கும் உண்டு.
298. அவனுடைய ஜ்ஞானத்துக்கு இலக்கு இவனுடைய குணம்; அஜ்ஞாநத்துக்கு இலக்கு இவனுடைய தோஷம்; ஶக்திக்கு இலக்கு இவனுடைய ரக்ஷணம்; அஶக்திக்கு இலக்கு பரித்யாகம்.
299. இவனுடைய ஜ்ஞாநத்துக்கு இலக்கு ஆசார்ய குணம்; அஜ்ஞாநத்துக்கு இலக்கு ஆசார்ய தோஷம்; ஶக்திக்கு இலக்கு ஆசார்ய கைங்கர்யம்; அஶக்திக்கு இலக்கு நிஷித்த அநுஷ்டானம்.
300. நிஷித்தம் தானும் நாலு படியாய் இருக்கும்.
301. அதாவது அக்ருத்ய கரணமும் பகவத் அபசாரமும் பாகவத அபசாரமும் அஸஹ்ய அபசாரமும்.
302. அக்ருத்ய கரணம் ஆவது பர ஹிம்ஸை பர ஸ்தோத்ரம் பர தார பரிக்ரஹம் பர த்ரவ்ய அபஹாரம் அஸத்ய கதநம் அபக்ஷ்ய பக்ஷணம் தொடக்கமானவை.
303. பகவத் அபசாரம் ஆவது தேவதாந்தரங்களோடு ஒக்க ஈஶ்வரனை நினைக்கையும், ராம க்ருஷ்ணாதி அவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தியும், வர்ணாஶ்ரம விபரீதமான உபசாரமும், அர்ச்சாவதாரத்தில் உபாதாந நிரூபணமும் ஆத்ம அபஹாரமும் பகவத் த்ரவ்ய அபஹாரமும் தொடக்கமானவை.
304. பகவத் த்ரவ்யத்தைத் தான் அபஹரிக்கையும் அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும் அவர்கள் பக்கலிலே யாசிதமாகவும் யாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும் பகவானுக்கு அநிஷ்டமாய் இருக்கும்.
305. பாகவத அபசாரம் ஆவது அஹங்கார அர்த்த காமங்கள் அடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம்.
306. அஸஹ்ய அபசாரம் ஆவது நிர்நிபந்தநமாக பகவத் பாகவத விஷயம் என்றால் அஸஹமாநனாய் இருக்கையும் ஆசார்ய அபசாரமும் தத்பக்த அபசாரமும்.
307. இவை ஒன்றுக்கொன்று க்ரூரங்களுமாய் உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமாய் இருக்கும்.
308. தான் ஹிதோபதேசம் பண்ணும் போது தன்னையும் ஶிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்.
309. தன்னை மாறாடி நினைக்கை ஆவது தன்னை ஆசார்யன் என்று நினைக்கை; ஶிஷ்யனை மாறாடி நினைக்கை ஆவது தனக்கு ஶிஷ்யன் என்று நினைக்கை; பலத்தை மாறாடி நினைக்கை ஆவது த்ருஷ்ட ப்ரயோஜநத்தையும், ஶிஷ்யநுடைய உஜ்ஜீவநத்தையும், பகவத் கைங்கர்யத்தையும் ஸஹவாஸத்தையும் பலமாக நினைக்கை.
310. நினையாது இருக்க இந்நாலு பலமும் ஸித்திக்கிறபடி என் என்னில்; ஶேஷ பூதனான ஶிஷ்யன் நினைவாலே த்ருஷ்ட பலம் ஸித்திக்கும்; ஈஶ்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும்; ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும்; உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்.
311. ஸாக்ஷாத் பலமும் ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி என் என்னில்; தன் நினைவாலும் ஈஶ்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.
312. இப்படி ஒழிய உபதேசிக்கில் இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தி இல்லை.

313. ஆசார்யனுக்கு ஶிஷ்யன் பக்கல் க்ருபையும் ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும்.
314. க்ருபையாலே ஶிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும்; பாரதந்த்ர்யத்தாலே தன் ஸ்வரூபம் ஸித்திக்கும்.
315. நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனை.
316. ஸம்ஸார வர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான பகவந் மந்த்ரங்களை உபதேசித்தவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தி இல்லை.
317. பகவந் மந்த்ரங்களை க்ஷுத்ரங்கள் என்கிறது பலத்வாரா.
318. ஸம்ஸார வர்த்தகங்கள் என்கிறதும் அத்தாலே.
319. இது தான் ஔபாதிகம்.
320. சேதநனுடைய ருசியாலே வருகையாலே.
321. ஶிஷ்யன் என்பது ஸாத்யாந்தர நிவ்ருத்தியும், பல ஸாதந ஶுஶ்ருஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையும் உடையவனை.
322. மந்த்ரமும் தேவதையும் பலமும் பல அநுபந்திகளும் பல ஸாதநமும் ஐஹிக போகமும் எல்லாம் ஆசார்யனே என்று நினைக்கக் கடவன்.
323. 'மாதா பிதா யுவதய:' என்கிற ஶ்லோகத்திலே இவ்வர்த்தத்தைப் பரமாசார்யர் அருளிச் செய்தார்.
324. இதுக்கடி உபகார ஸ்ம்ருதி.
325. உபகார ஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்த நிலம் ஈஶ்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை.
326. ஶிஷ்யனும் ஆசார்யனும் அந்யோந்யம் ப்ரிய ஹிதங்களை நடத்தக் கடவர்கள்.
327. ஶிஷ்யன் தான் ப்ரியத்தை நடத்தக் கடவன்; ஈஶ்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக் கடவன்; ஆசார்யன் மாறாடி நடத்தக் கடவன்.
328. ஶிஷ்யன் உகப்பிலே ஊன்றிப் போரும்; ஆசார்யன் உஜ்ஜீவநத்திலே ஊன்றிப் போரும்.
329. ஆகையால் ஶிஷ்யன் ஆசார்யனுடைய ஹர்ஷத்துக்கு இலக்காகை ஒழிய ரோஷத்துக்கு இலக்காகைக்கு அவகாஶம் இல்லை.
330. நிக்ரஹத்துக்குப் பாத்ரமாம் போது அது ஹித ரூபம் ஆகையாலே இருவர்க்கும் உபாதேயம்.
331. ஶிஷ்யனுக்கு நிக்ரஹ காரணம் த்யாஜ்யம்.
332. நிக்ரஹம் தான் பகவந் நிக்ரஹம் போலே ப்ராப்ய அந்தர்கதம்.
333. ஆசார்யன் ஶிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக் கடவன்; ஶிஷ்யன் ஆசார்யனுடைய தேஹத்தைப் பேணக் கடவன்.
334. இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபமுமாய் பகவத் கைங்கர்யமுமாய் இருக்கும்.
335. ஆசார்யனுக்கு தேஹ ரக்ஷணம் ஸ்வரூப ஹாநி; ஶிஷ்யனுக்கு ஆத்ம ரக்ஷணம் ஸ்வரூப ஹாநி.
336. ஆசார்யன் ஆத்ம ரக்ஷணம் பண்ணுமிடத்தில் அஹங்காரம் விரோதி; ஶிஷ்யன் தேஹ ரக்ஷண பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி.
337. ஆசார்யன் தன்னுடைய தேஹ ரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக் கடவன்; ஶிஷ்யன் ஸ்வதேஹ ரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக் கொண்டு பண்ணக் கடவன்.
338. ஆசார்யன் ஶிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக் கடவன் அல்லன்; ஶிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவன் அல்லன்.
339. கொள்ளில் மிடியனாம், கொடுக்கில் கள்ளனாம்.
340. கொள் கொடை உண்டானால் ஸம்பந்தம் குலையும்.
341. இவன் மிடியன் ஆகையாலே கொடான்; அவன் பூர்ணன் ஆகையாலே கொள்ளான்.
342. அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது; இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.
343. ஆனால் ஶிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணும் உபகாரம் ஒன்றும் இல்லையோ என்னில்.
344. ஆசார்யன் நினைவாலே உண்டு.

345. அதாவது ஜ்ஞான வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள்.
346. ஆசார்ய ப்ரீதி அர்த்தமாக இவனுக்குத் தவிர வேண்டுவது பகவத் த்ரவ்யத்தை அபஹரிக்கையும் பகவத் போஜநத்தை விலக்குகையும் குரு மந்த்ர தேவதா பரிபவமும்.
347. பகவத் த்ரவ்ய அபஹாரம் ஆவது ஸ்வாதந்த்ர்யமும் அந்ய ஶேஷத்வமும்; பகவத் போஜநத்தை விலக்குகை ஆவது அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை.
348. அவனுடைய ரக்ஷகத்வ க்ரமம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம்; குரு பரிபவம் ஆவது கேட்ட அர்த்தத்தின்படி அநுஷ்ட்டியாது ஒழிகையும் அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையும்; மந்த்ர பரிபவம் ஆவது அர்த்தத்தில் விஸ்ம்ருதியும் விபரீதார்த்த ப்ரதிபத்தியும்; தேவதா பரிபவம் ஆவது கரண த்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணம் ஆக்குகையும், தத் விஷயத்தில் ப்ரவணம் ஆக்காது ஒழிகையும்.
349. இவனுக்கு ஶரீராவஸாநத்தளவும் ஆசார்ய விஷயத்தில் ’என்னைத் தீமனம் கெடுத்தாய்’ ’மருவித் தொழும் மனமே தந்தாய்’ என்று உபகார ஸ்ம்ருதி நடக்க வேணும்.
350. மனஸ்ஸுக்குத் தீமை ஆவது ஸ்வகுணத்தையும் பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கை.
351. தோஷம் நினையாது ஒழிகிறது குணம் போலே உண்டாய் இருக்கவன்று, இல்லாமையாலே.
352. தோஷம் உண்டென்று நினைக்கில் அது பரதோஷம் அன்று, ஸ்வதோஷம்.
353. ஸ்வதோஷம் ஆனபடி என் என்னில்;
354. ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.
355. ஸ்வதோஷம் இல்லை ஆகில் குண ப்ரதிபத்தி நடக்கும்.
356. நடந்தது இல்லை ஆகில் தோஷ ஜ்ஞாநமே தோஷமாம்.
357. இதுதனக்கு அவஸரம் இல்லை.
358. ஸ்வதோஷத்துக்கும் பகவத் பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே.
359. ஸம்ஸாரிகள் தோஷம் ஸ்வதோஷம் என்று நினைக்கக் கடவன்.
360. அதுக்கு ஹேது பந்த ஜ்ஞானம்.
361. ’இறைப்பொழுதும் எண்ணோம்’ என்கையாலே அது தான் தோன்றாது.
362. தோன்றுவது நிவர்த்தந அர்த்தமாக.
363. பிராட்டி, ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப் போலே, தனக்குப் பிறர் செய்த குற்றங்களை பகவத் பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவன் அல்லன்.
364. அறிவிக்க உரியவனகப்பட வாய் திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்கும் என்னா நின்றதிறே.
365. குற்றம் செய்தவர்கள் பக்கல், பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்.
366. ஸ்வதோஷ அநுஸந்தாநம் பய ஹேது; பகவத் குண அநுஸந்தாநம் அபய ஹேது.
367. பய அபயங்கள் இரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்.
368. ஆனால் ’நலிவான் இன்னம் எண்ணுகின்றாய்’ ’ஆற்றங்கரை மரம் போல் அஞ்சுகின்றேன்’ என்கிற பாசுரங்களுக்கு அடி என் என்னில்’;
369. பந்த அநுஸந்தாநம்.
370. ப்ரஜை தெருவிலே இடறித் தாய் முதுகிலே குத்துமா போலே, நிருபாதிக பந்துவாய் ஶக்தனாய் இருக்கிறவன் விலக்காது ஒழிந்தால் அப்படிச் சொல்லலாமிறே.
371. ப்ரஜையைக் கிணற்றின் கரையினின்றும் வாங்காது ஒழிந்தால் தாயே தள்ளினாள் என்னக் கடவதிறே.
372. இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேது அல்லாதாப் போலே அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேது அன்று.
373. இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபம்.
374. இழவுக்கு அடி கர்மம்; பேற்றுக்கு அடி க்ருபை.
375. மற்றைப்படி சொல்லில் இழவுக்கு உறுப்பாம்.
376. எடுக்க நினைக்கிறவனைத் தள்ளினாய் என்கை எடாமைக்கு உறுப்பிறே.

377. 'சீற்றமுள' என்ற அநந்தரத்திலே இவ்வர்த்தத்தைத் தாமே அருளிச் செய்தாரிறே.
378. சீற்றம் உண்டு என்று அறிந்தால் சொல்லும்படி என் என்னில், அருளும் ஆர்த்தியும் அநந்யகதித்வமும் சொல்லப் பண்ணும்.
379. சீறினாலும் காலைக் கட்டிக் கொள்ளலாம்படி இருப்பான் ஒருவனைப் பெற்றால் எல்லாம் சொல்லலாமிறே.
380. 'க்ருபயா பர்யபாலயத்' 'அரிசினத்தால்'.

### மூன்றாம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்